நிரு டியூசன்
சென்ரர்
ஸ்ரேசன் றோட்
கோண்டாவில்
A/L 91
APPLIED MATHS
மூட்டிய கோல்கள்
PURE MATHS தொடர்
By: Mr. கிருஷ்ணா
ஆரம்பம்: 14. 06. 90
வியாழன் 6 மணி A. M.

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 120 செவ்வாய் 05 06 1990 (வைகாசி 22) துல்ஹஃதா 11

நடைபெறுகின்றன
1990 DEC O/L
DAY CLASSES
விஞ்—இரா. செல்வவடிவேல்
தமிழ் — பண்டிதர்
கணிதம் — ரவி
ஆங்கிலம்— பாலா
சமூகக்கல்வி — மஃறூப்
நிரு டியூசன்
சென்ரர்
ஸ்ரேசன் றோட்
கோண்டாவில்

### தெற்கில் மீண்டும் இனத்துவேஷ பயங்கரம்

# '6வது ஷரத்து நீக்கப்பட்டால் மறு நிமிடமே நாடு துண்டாடப்பட்டாலும் வியப்பில்லை'

### மாஜி மந்திரி, மகாபோதி தலைவர் காமினி தூண்டல்

அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது ஷரத்து நீக்க விவகாரத்தை அடிப்படையாக வைத்துத் தென்னிலங்கையில் இனத்துவேஷப் பிரசாரம் முடுக்கி விடப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

''இச் ஷரத்து நீக்கம் நாடு துண்டாடப் படுவதற்கு வழி வகுக்கும்'' என்று மகாபோதி சங்கத் தலைவர் திரு காமினி ஜெயசூரியா இதற்கு உருக் கொடுத்துள்ளார்.

''இத் திருத்தச்சட்ட மூலத்தை நீக்கிவிட அரசு பிரயத்தனம் செய்து வருகிறது. இதன் மூலம் நாடு துண்டாடப்படுவது தவிர்க்கமுடியாது போகலாம்என்பதால்நாட்டுப் பற்றுள்ள மக்கள் இதற்கு ஒன்றுபட்டு எதிர்ப்புக் குரல் எழுப்பவேண்டியது அவர்களது கடமையாகும் என்று முன்னாள் அமைச்சரும் மேற்படி சங்கத்தின் தலைவருமான திரு காமினி ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

சிலரின் சுய நன்மையைர

—8 ஆம் பக்கம் பார்க்க்

### ஜனாதிபதி புலிகளிடம் உறுதிமொழி

## ★ மோதும் நோக்கம் அறவே கிடையாது ★ பேச்சுக்கள் மூலமே தீர்வுக்கு விருப்பம்

# ஒரு கிழமைக்குள் புதிய மசோதா

# மூன்று மாதத்துள் தேர்தல் திகதி!

(கே. வி. ஆர். ஸ்ரீ)

வடக்கு, கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்கென புதிய மசோதா ஒன்றினை அரசாங்கம் இன்னும் ஒரு வாரத்துக்குள் பாராளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளது. இதனைத் தொடர்ந்து புதிய தேர்தலுக்கான திகதி அடுத்த மூன்று மாதங்களுக்குள் அறிவிக்கப்படும்.

மேற்கண்டவாறு ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாஸ தமிழீழ விடுதலைப் புலிகள் தூதுக்குழுவினருடனான பேச்சுவார்த்தைகளின் போது அவர்களுக்கு உறுதியளித்துள்ளார்..

ஜனாதிபதி, நீதியமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ் ஹமீத் ஆகியோருடனான கொழும்பு பேச்சுவார்த்தைகள் பற்றி விளக்குவதற்காக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றிரவு கோண்டா

—08 ஆம் பக்கம் பார்க்க

### வட, கிழக்கு மாவட்டங்களில்

## புலிகள்- ஹமீத் இணைந்து நிலைமைகளை ஆராய்வர்

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை பலமுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும் ஆக்குவதற்

—08ஆம் பக்கம் பார்க்க

## அமைய ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்க ஏற்பாடு

பயங்கரவாத, அரசவிரோத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் அமைய ஊழியர்களுக்கும் தற்காலிக நாட்சம்பள ஊழியர்களுக்கும் வழங்கப்படும்.

இதற்கான சுற்றறிக்கை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள்

—08ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவு, அல்லைப்பிட்டியில் பறவைகள் சரணாலயம்

யாழ்ப்பாணம்- ஊர்காவற்துறைவீதி யாழ்ப்பாணம் மண்டைதீவு வீதி பகுதியில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி முக்கோண கடற்பிரதேசம் பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

—08 ஆம் பக்கம் பார்க்க

### பத்திரிகையை எரித்தது கீழ்த்தரச் செயல்

# உண்மையை மறைக்க முடியாது புலிகள் பிரமுகர் சந்திரன் சாடுகிறார்

'பத்திரிகைகள் உண்மையை எடுத்துரைக்கும் கடமைப்பாட்டைக் கொண்டுள்ளன ஒரு பத்திரிகையை எரிப்பதன் மூலம் உண்மையை மறைக்க முடியாது. இதனை நம் மத்தியிலுள்ளோர் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற மாவட்ட மெய்வல்லுநர் போட்டியில் விசேட விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வன்னிப்பகுதி பொறுப்பாளர் சந்திரன் தெரிவித்தார்.

'சில தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் வைத்து தினசரிப்பத்திரிகை யொன்று எரிக்கப்பட்டுள்ளது. இது வெட்கப்பட வேண்டிய மிகவும் கீழ்த்தரமான செயலாகும்,,

'ஒரு ஜனநாயக நாட்டில்



பத்திரிகையை எரிப்பதன் மூலம் உண்மையை மறைக்க முடியாது. சில காலத்திற்கு முன்னர் அந்நிய இராணுவத்தினர் தமிழ்ப்பிரதேசங்களில் எரிப்பு வேலைகளை மேற்கொண்டிருந்தனர். இதனால் அவர்கள் கண்ட நன்மைதான் என்ன? மாறாக எங்கள் சாதனைகளை உலகெங்கும் உள்ளோர் இலகுவில் அறிந்து கொள்ளவே அவர்களது எரிப்பு வேலைகள் உதவி புரிந்தன,

கிளிநொச்சி மாவட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. கரடிப்போக்கால் தினமும் அரச உயர் அதிகாரிகள் போய்வருகிறார்கள் ஆனால் அங்கு ஒரு பாலம் இடிந்த நிலையிலிருந்ததை எவருமே கவனிக்கவில்லை இது பற்றி

—08ஆம் பக்கம் பார்க்க

## மதிய உணவு முத்திரை வழங்கல் மட்டக்களப்பிலும் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாணவர்களுக்கு மதிய உணவு முத்திரை வழங்கும் நடவடிக்கைகளை சமூக சேவைகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

மே மாதத்திற்கான மாணவர் வரவு விபரங்களை பாடசாலை அதிபர்கள் உதவி அரசாங்க அதிபர்களிடம் சமர்ப்பித்து உணவு முத்திரை

— 8 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பில் பனை

## யாழ் மாவட்டத்திலிருந்து விதை

மட்டக்களப்பு மாவட்டத்தில் பனை மரங்கள் விருத்தி செய்யப்படும்.

இதற்கான நடவடிக்கைகளைப் பனம்பொருள் அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது.

இதற்கென யாழ்ப்பாணத்திலிருந்து பனம் விதைகள்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## பரந்தன் இரசாயன ஆலை இரு வாரங்களில் இயங்கும்

பரந்தன் இரசாயன தொழிற்சாலை இன்னும் சில தினங்களில் இயங்கவுள்ளது. தற்போது இயந்திர உபகரணங்கள் சீரமைக்கப்பட்டு வருவதாக கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி நேற்று தெரிவித்தார்,

— 8 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா மக்கள் வங்கியில் 1000 ரூபா

# கள்ள நோட்டு மாற்றப்பட்டுள்ளது இம் மோசடியில் பிரபல புள்ளியும் தொடர்பு?

வவுனியா மக்கள் வங்கியில் ஆயிரம் ரூபா கள்ள நோட்டு மாற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பூர்வாங்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

இக்களள நோட்டினை யார் மாற்றினார் என்பதும் இப்போது சூசகமாக வெளிவந்து விட்டதாகச்சொல்லப்படுகின்றது.

பெரிய புள்ளி ஒருவர் இதில் சம்பந்தப் பட்டுள்ளார் என விடயம் அறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது. (11)

# ஆறுமாத சம்பள முற்பணம் இவர்களுக்கு இன்னும்இல்லை

யாழ் சுகாதார திணைக்களத்தில் ஆறுமாத சம்பள முற்பணம் கோரி விண்ணப்பித்துள்ள திணைக்கள ஊழியர்களுக்கு இதுவரை இந்த முற்பணம் கிடைக்கவில்லை.

இதேவேளை தனியான திணைக்கள நிர்வாகத்தில் இயங்கிவரும் யாழ்ப்பாணல போதனா வைத்தியசாலையில் இந்த ஆறுமாத சம்பள முற்பணத்தைக் கோரி விண்ணப்பித்த ஊழியர்களுக்கு இந்த சம்பள முற்பணம் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது(.13கி)

## தீவுப் பகுதியில் அறிவிப்பு

# பனையை தறிப்பவர்- புதிய பனையை உருவாக்க வேண்டும்

சொந்தத் தேவைக்காக பனைமரங்கள் தறிக்கப்பட்டால் அதற்குப் பதிலாக பல பனைமரங்களை உருவாக்க வேண்டும்.

மேலும் வியாபார நோக்கிற்காக பனைமரம் தறித்தல் தீவுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடை செய்யப்பட்டுள்ளது.

தமது சொந்தத் தேவைகளுக்கோ, அன்றி தமது வீட்டிற்கு இடைஞ்சலாக இருக்கும் பனைமரங்களை தறிக்க வேண்டுமானால் அனுமதி பெற்றே தறிக்க வேண்டும். (24.கி)

## இப்படியும் நடக்கிறது

# மதிய உணவு திட்டத்தால் சில ஆசிரியர் பட்டினி

ஆசிரியர்கள் பலர் இருநேரப் பாடசாலைத் திட்டத்தால் மதிய உணவுக்கு வீடு செல்ல முடியாத இக்கட்டான நிலைக்கு ஆளாகி உள்ளனர்

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு விநியோகத்தைக் கவனிக்கும் ஆசிரியர்களுக்கே இக் 'கதி' ஏற்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர்கள் மாணவரின் மதிய உணவு விநியோகத்தை மேற் பார்வை செய்ய வேண்டும். மாணவர்கள் மதிய இடைவேளையின் போது வீடு செல்ல அனுமதிக்கப்படாது கண்காணிக்க வேண்டும்.

இவற்றைக் கவனிப்பதற்கு ஆசிரியர்கள் மதிய நேரத்தில் பாடசாலையில் நிற்க வேண்டும். இந்நிலையினால் ஆசிரியர்கள் மதிய உணவுக்காக வீடு செல்ல முடியாத நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி உள்ளனர். இதனால் பிரஸ்தாப ஆசிரியர்கள் 'பட்டினி' கிடக்க நேரிட்டுள்ளதாம். (36கி

## பலாலி கலாசாலை மெய்வல்லுநர்போட்டி

பலாலி ஆசிரியர் கலாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஆறாம் திகதி புதன் கிழமை பி. ப. 2.00 மணிக்கு அதிபர் ஆர். எஸ். நடராஜா தலமையில் கோப்பாய் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டிக்கு முன்னாள் கலாசாலை அதிபர் வ. கந்தசாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.(கி)

## வானொலியில் இன்று

**செவ்வாய் 05- 06- 90**

காலை

5.05 தோத்திரமாலை— மூகாம்பிகா சுப்ரபாதம்
5.30 பாமாலை— காமாஷி அம்மன் திருவிருத்தம்
5.55 பக்திப்பாடல்கள்
8.00 நாதவினோதம்
8.15 மெல்லிசைப் பாடல்கள்
9.00 வர்த்தகசேவை

பகல்

10.00 இசையமுதம்
10.30 பாட்டு— தேவகி கண்ணுத்துரை
11.00 வீணைக்கச்சேரி சிட்டிபாபு
12.00 வர்த்தகசேவை
12.45 செய்திகள்
12.55 அறிவிப்புகள்
1.00 வர்த்தகசேவை

மாலை

6.00 செய்திகள்
6.10 அறிவிப்புகள்
6 15 சைவநெறி
6.30 பொலிஸாரும் நாமும்
6.45 கிறிஸ்தவ சிறுவர் நிகழ்ச்சி
7.00 இளைஞர் மன்றம்— த.தேவதாஸ்
7.30 மெல்லிசைப் பாடல்கள்
7.50 உலகச்செய்திகள்

இரவு

8.00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9.00 செய்திகள்
9.10 அறிவிப்புகள்
9 20 பக்திப்பாடல்கள்
9.30 ''ஐக்கிய நாடுகள் சுற்றாடல் தினம்'' பற்றிய கலந்துரையாடல்
10.00 தாளவாத்தியக் கச்சேரி— ஆர். யோகராஜா- மிருதங்கம்
10.30 மெல்லிசைப் பாடல்கள்
10.45 பஜன்
11.00 ஒலிபரப்பு முடிவு


**SLAS**

பரீட்சைக்குரியநூல்கள்

- நுண்ணறிவு (I Q)
- பொதுவுளச்சார்பும் பொதறிவும்
- கிரகித்தல்
- பொதுக்கட்டுரைகள் (பொதுவினாத்தாள்)
- விடய ஆய்வு (இது 10. 6. 90 இல் வெளிவரும்)

க. குணராசா
(MA. SLAS)

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
06028



**சிறு விளம்பரம்**

**தேவை**

ஸ்ருடியோ வேலையில் பயிற்சி பெற விரும்பும் பெண்கள் 12.06.90 க்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும். A/L படித்த யாழ். நகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. கொழும்பு ஸ்ருடியோ, 55 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்,
06036



**புதுமனை புகுவிழா அழைப்பிதழ்**

அன்புடையீர்!

நிகழும் பிரமோதூத வருஷம் வைகாசி திங்கள் 21-ம் நாள் (7. 6. 90) வியாழக்கிழமை காலை 9. 30 - 11. 00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற.

★ சுந்தர கிரி ★

எனும் புதுமனை புக எண்ணி உள்ளோம் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி P. சுந்தரம்,
(கோண்டாவில்)
திரு. திருமதி S. பக்கிரிசாமி
(சித்தன்கேணி)

(தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை)
06035


# பொடிச் செய்திகள்

## மாணவர் சுற்றுலா

தற்போது கீரிமலைக்கு பாடசாலை மாணவர் அதிகளவில் சுற்றுலாவினை மேற்கொண்டு வருகின்றனர்.

தினமும் பஸ் வண்டிகளில் பல பாடசாலைகளைச் சேர்ந்தமாணவர் இப்பகுதிக்கு வருகை தருகின்றனர்.(48கி)

## நெல்லியடியில் வெண்கட்டி தொழிற்சாலை

வினாவில் நெல்லியடியில் கரவெட்டி வடக்குசிற்றூர் அவையினரால் வெண்கட்டித் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்து.(39கி)

## உண்டியலில் திருட்டு

(கீரிமலை)

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய உண்டியல் உடைத்து திருட்டு நடைபெற்றுள்ளது. கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றது.

(48.கி)

## திஸ்ஸ விகாரையில் ஷெல் பொருத்திய வாகனங்கள்

(கீரிமலை)

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை இராணுவ முகாமுக்கு 5 அங்குல ஷெல் பொருத்தப்பட்ட ஜீப்புகள் வந்தடைந்துள்ளன.

(48.கி)

## வீதி திருத்தம்

(கீரிமலை)

நீண்ட காலமாக பழுதடைந்திருந்த பொன்னாலை-கீரிமலை கடற்கரை வீதி திருத்தப்படுகிறது.

(48.கி)

## கோப்பாயில் சிரமதானம்

(கோப்பாய்)

உலக சூழல் தினத்தை முன்னிட்டு சனிக்கிழமையன்று கோப்பாயில் சிரமதான வைபவங்கள் இடம் பெற்றன.கோப்பாய் பிரதேச சபை ஊழியர்கள் சபையின் பொறுப்பதிகாரி ரங்கநாதன் தலைமையில் நாவலர் வித்தியாலயத்தில் சிரமதானத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடதக்கது இவர்களுடன் இப்பகுதி வாழ் வாலிபர்களும் சேர்ந்து பாடசாலை வளவின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் துப்புரவு செய்தனர்.

கோப்பாய் மத்தி முத்துமாரியம்மன் ஆலயத்தில் பரிபாலன சபையின் தலைவர் க.இராமலிங்கம் தலைமையில் சிரமதானம் நடைபெற்றது. இவ்வைபவத்தில் இப்பகுதி இளைஞர்கள் ஆலயத்தின் வீதிகளைத் துப்புரவு செய்வதிலும் இடிந்த கட்டிடத்தின் கல் மண் என்பவற்றை அகற்றும் பணியிலும் ஈடுபட்டிருந்தனர்.(23 கி)

## புதிய நியமனம் இன்னும் இல்லை

(தாளையடி)

உடுத்துறை மகாவித்தியாலய அதிபரும் கொத்தணி அதிபருமான கே. வீ. இராசலிங்கம் கடந்த நான்கு மாதங்களுக்கு முன் கல்வி அதிகாரியாக பதவி உயர்வு பெற்று சென்றுள்ளார். அவருக்குப் பதிலாக இதுவரை நிரந்தர அதிபர் எவரும் நியமிக்கப் படவில்லை உதவிஆசிரியர் ஒருவரே பதில் அதிபராகக் கடமையாற்றுகிறார். பிரதிக் கொத்தணி அதிபரே கொத்தணி அதிபருக்குரிய கடமைகளைச் செய்து வருகிறார். (18 கி)

## தெல்லிப்பழை சிற்றூரவை

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் சிற்றூரவை உறுப்பினர்களுக்கான கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தெல்லிப்பழை, அளவெட்டி, கீரிமலை ஆகிய பகுதிகளிலிருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் உரையாற்றிய வலிகாமம் பகுதி விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் ஆஞ்நேயர் சிற்றூரவை விதிமுறைகள் பற்றி உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தார்.

13ம் திகதி பிற்பகல் வட்ட அவைக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (48கி)

## வர்த்தக ஊழியர்சங்க புதிய நிர்வாகிகள்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வர்த்தக ஊழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இ. சற்குணராசா தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- இரா. சுப்பையா உப தலைவர்- வே. தியாகராசா, க, நாகலிங்கம்

செயலாளர்- சி.குமாரலிங்கம் உபசெயலாளர்- க. செல்வராசா பொருளாளர்- கி. கிருஷ்ணன்

மற்றும் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (கி)

## வேலணை நூலகத்தைத்திருத்த நிதி ஒதுக்கீடு

வேலணைப் பிரதேச சபையின் பொது நூல் நிலையத்தைச் சீர் அமைப்பதற்கென அரசாங்கம் இருபத்தி ஐயாயிரம் ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து வழங்கியுள்ளது,

இவ்வாறு வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு பொது நூல் நிலையத்தை சீர் அமைப்பதற்கான கேள்விப்பத்திரம் வெகுவிரைவில் வேலணை பிரதேச சபையினால் கோரப்படவுள்ளது. (19.கி)

## பதிவாளராக நியமனம்

வடமராட்சிப் பிரிவுக்கான விவாகப் பதிவாளராக பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலக உத்தியோகத்தர் ஞா. அல்போன்ஸ் பதிவாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கற்கோவளத்தைச் சேர்ந்தவராவர். (15-கி)

## மருதனாமடத்தில் அதிபர்கள்கூட்டம்

மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவிலுள்ள கொத்தணி அதிபர்கள் கொத்தணி உதவியாளர்களுக்கான கூட்டம் 6ம் திகதி கலை 8. 30 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.(ப-2 கி)

## சமயப்பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை 1989ல் நடத்திய இலங்கை சைவ சமயப் பாடப் பரீட்சைமுடிவுகள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.(ப-5கி)

## பொது அறிவு வளர போட்டிகள் அவசியம்

கல்வி என்பது பாடவிதானத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. அதற்கப்பாலும் கல்விக்குப் பல இலக்குகள் உண்டு.

ஒரு மாணவன் தன் பாடப் புத்தகத்தில் உள்ளவற்றை மட்டும் அறிந்திருந்தால் போதாது, அவன் தான் வாழும் சூழலின், காலத்தின் பின்னணிகளையும், செயற்பாடுகளையும் பற்றி அறிவதும் அவசியமானதாகும்.

இவ்வகையிலே பொது அறிவு என்பது வாழ்க்கை யதார்த்தங்களுக்கும் முகம் கொடுக்கும் ஒவ்வொருவருக்கும் அவசியமாகும்.

எமது பிரதேச மாணவர்கள் தாம் கற்கும் பாடங்கள் சம்பந்தமான விடயங்களைச் சிறந்த முறையிலேயே கற்று செப்புவதனால் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைக்கிறார்கள். ஆனால் சர்வதேச நிகழ்வுகள், அரசியல் பின்னணிகள், புவியியல் உண்மைகள் பற்றிய அறிவினைப்பற்றி அவர்கள் அக்கறை கொள்வதில்லை.

சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறுகின்ற போதிலும் எமது மாணவர்கள் குறுகிய பொது அறிவு உடைய காரணத்தினால் பல சந்தர்ப்பங்களில் கூனிக் குறுகி நிற்கின்ற நிலை ஏற்பட்டதை அனுபவத்தில் கண்டுள்ளோம்.

இலங்கையின் ஏனைய பிரதேச மாணவருக்கு பொது அறிவுப்போட்டிகள் தொலைக்காட்சியிலும், வானொலியிலும் பல்வேறு நிறுவனங்களின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டுப்

# இதயநாதம்

செவ்வாய்க்கிழமை 05-06-1990

நல்வாக்கு

உங்கள் எண்ணங்கள் எப்படியோ, அப்படித்தான் வாழ்க்கையும் அமையும். எனவே சிறந்ததையே எண்ண முயற்சி செய்யுங்கள்.

—மார்க்கஸ்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

பொது அறிவு விடயத்தில் ஊக்கமளிக்கப்படுகின்ற போதிலும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மாணவருக்கு இவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடைப்பது அரிதாகவே உள்ளது.

இதனால் பொது அறிவு விடயத்தில் அவர்களுக்குள்ள ஆர்வமும் மங்கி வருகின்றது. இந்நிலையில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நிதர்சனத்துடன் இணைந்து யாழ். மாவட்ட மாணவர்கள் மத்தியில் நடாத்திவரும் மேஜர் முரளி நினைவுக் கிண்ணத்திற்கான உயர்தர வகுப்பு மாணவருக்குரிய பொது அறிவுப் போட்டிகள் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளன.

எமது மாணவர்கள் பொது அறிவு விடயங்களில் ஆர்வம் கொள்ளவும், தமது திறமையை நிரூபிக்கவும் மேற்படி போட்டி வழி சமைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் முன்னாள் பொறுப்பாளராகவிருந்த இரத்தின சிங்கம் என்ற இயற்பெயரைக் கொண்ட மேஜர் முரளி ஊரெழுவில் களப் பலியாகியவர். ஆற்றலுடைய இப் போராளியின் நினைவிலே மாணவர்களுக்கிடையிலே பொது அறிவை ஊட்ட நடாத்தப்படும் போட்டியை மனதாரப் பாராட்ட வேண்டும்.

இதுவரை யாழ்.மாவட்டத்தில் உள்ள கல்விக் கோட்ட மட்டத்தில் இப்போட்டிகள் கடந்த சனிக்கிழமை நடைபெற்று முடிந்துள்ளன.

எதிர்வரும் 7—ம் திகதி யாழ்.மத்திய கல்லூரியில் இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

நடைபெற்று முடிந்த போட்டிகளை அவதானித்த பொழுது பெரும்பான்மையான மாணவர்கள் மிக அடிப்படையிலான பொது அறிவு விடயங்களைக்கூட அறியாதிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் வெளிவருகின்ற முக்கிய நிகழ்வுகளைக்கூட மாணவர்கள் அறியாமலேயே இருந்திருக்கிறார்கள். இந் நிலையைப் போக்க மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதும், நூலகத்தைப் பயன்படுத்தத் தூண்டுவதும் ஆசிரியர்களுக்குரிய கட்டாயக் கடமையாகும்.

எமது மாணவர் எவ் விடயத்திலும் எவருக்கும் இரண்டாம் பட்சம் என்ற நிலை ஏற்படக் கூடாது. எனவே குன்றிய நிலையில் உள்ள எமது மாணவர்களின் பொது அறிவு வளத்தை வளர்க்க இத்தகைய போட்டிகள் தொடர்ந்தும் நடாத்தப்படல் வேண்டும்.

### இன்று ஐக்கிய நாடுகள் உலக சுற்றாடல் தினம்

# சூழல் மாற்றத்தினால் வெப்பம் அதிகரிப்பு; இதனால் பல நாடுகள் கடலில் மூழ்கும் அபாயம்



"மனிதன் புவியில் வாழ்பவன் மட்டுமல்லன் அவன் புவியின்புறஅமைப்பைமாற்றி அமைக்கும் சிற்பியுமாவான்' என்ற றசல் சிமித்தின் கூற்றிற் கிணங்க புவி மேற்பரப்பானது மனிதனால் பல்வேறு மாற்றங்களுக்கு முற்பட்டு வருகின்றது.

மனிதன் காடுகளை அழிக்கத் தொடங்கிய போதே புவி மேற்பரப்பில் மாற்றத்தினையும் அதன் வாயிலாகத் தனக்குத்தானே சுகாதாரத் தீங்கினையும் ஏற்படுத்தத் தொடங்கி விட்டான் எனலாம். புவி மேற்பரப்பில் மனித நடத்தைகள் எல்லை கடந்து விட்டன என்றே கூற வேண்டும். இன்று சூழல் மாசடைதலின் கால் ஏற்பட்ட சுகாதாரச் சீர்கேட்டினால் உலகம் மிக ஆபத்தான நிலையினை அண்மித்துக் கொண்டிருப்பது பல அறிஞர்களாலும் திட்டவட்டமாக உணரப்பட்டு பல்வேறு எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையினால் உலக சுற்றாடல் தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் உலக சுற்றாடற் சுகாதாரம் பற்றியும் அதன் சீர்கேடுகள் பற்றியும் நாம் அறிந்திருப்பதும் அறியாதோருக்கு அறிவிப்பதும் அவசியமானதாகும். புவிமேற்பரப்பு மாசடைவதாலும் அதனால் வளி, நீர் என்பன மாசடைவதாலும் சுகாதாரம் சீர்கெடுகின்றது. குடியேற்றத் திட்டங்களை ஏற்படுத்துவதாலும் பயிர்ச்செய்கை நிலத்தை விஸ்தரிப்பதனாலும் காடழிப்பானது துரிதமாக நடைபெற்று வருகின்றது. இதனால் விலங்கினங்கள் தமது புகலிடத்தை இழப்பதுடன் மண்ணரிப்பு, மண்ணகர்ச்சி அல்லது வழுக்கை, வெள்ளப் பெருக்கு, வரட்சி என்பன ஏற்படுகின்றன.

மேலும் வீட்டுத்தேவை தளபாடத்தேவை, எரிபொருள்தேவை என்பவற்றிற்காகவும் காடழிப்பு நடைபெறுகிறது. இதனால் உயிர்ச் சமநிலை பாதிப்படைகின்றது. காடழிப்பானது இயற்கையாக உருவாக்கப்பட்ட பச்சை வீட்டு விளைவுச் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதாவது தாவரப் போர்வையானது சூரியக் கதிர்களில் குறிப்பிட்ட அளவை உறிஞ்சியும் ஏனையவற்றை தெறிக்கச் செய்வதுடன் உறிஞ்சப்படும் வெப்பத்தை உள்விட்டு மீள்தெறிப்பு நடைபெறா வண்ணம் தடுத்து உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற சூழ்நிலை உருவாக்குகிறது. எனவே காடழிப்பினால் இச்செயற்பாடு மாற்றமடைந்து சூழற் சுகாதாரத்தைப் பாதிக்கிறது.

கைத்தொழிற் புரட்சியின் பின் இரசாயனத் தொழில் உட்படப் பல்வேறு கைத்தொழில்கள் பாரியளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் ஏற்படும் கழிவுப் பொருள்களை அகற்றுவது பெரும்பிரச்சனையாகவுள்ளது. எனவே வளி மண்டலமும் நீரும் மாசடைவது தவிர்க்க முடியாததாகிறது.

கைத்தொழிற் சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் தாழ்நிலப் பகுதிகளிலும், ஆறுகளிலும், அதிகளவில் கடல்களிலும் சேர்க்கப்படுகிறது. இதனால் நீர் மாசடைகின்றது. இதுதவிர குழாய் நீர் விநியோகச் சீர்கேடும் சுகாதாரப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பாவனையாளரது கவனமின்மையால் உடைந்து காணப்படும் குழாய்களின் வாயிலாக அதிகளவு நீர் வெளியேறி மேற்பரப்பின் தாழ்வான பகுதிகளில் தேங்கி நின்று நோய்க் கிருமிகள் உற்பத்தியாக ஏதுவாகும் அதேவேளை நோய்க் கிருமிகள் உடைவினூடாக நன்னீருடன் கலக்கப்படுகின்றது. இது மனிதனுக்கு விரைவில் நோயை ஏற்படுத்துகின்றது.

## ஒரு சிகரட் புகைப்பதனால் ஆயுளில் 15நிமிடம் குறைகிறது

மேலும் பயிர்ச்செய்கையாளர்கள் சில இடங்களில் பயிர்ச்செய்கை நிலங்களுக்ாகன கிருமி நாசினிகளைக் கிணற்றிலுள்ள நீரினுட் கலந்து அதனை நீரிறைக்கும் இயந்திரம்மூலம் இறைக்கும் நிலையும் காணப்படுகிறது. இதனால் மண் விரைவில் நஞ்சூட்டப்படுகிறது. அத்துடன் கிணற்று நீரின்மூலம் தரைக்கீழ் நீரும் நஞ்சூட்டப்படுகின்றது. இதைவிடக் கிணறுகளின் அருகாமையில் மலசல கூடங்களை அமைப்பதன் மூலம் அதில் இருந்து நஞ்சுக்கிருமிகள் கிணற்று நீரிற் கலக்கின்றன. இந்நிலை நகரப்பகுதிகளிலும் நெருக்கமான வாழ்விடப் பகுதிகளிலும் அதிகமாகக் காணப்படுகிறது.

நீர்ப்பாவனை இன்று அதிகரித்துள்ளதனால் அவ்விடங்களில் உவர் நீர் உட்புக வாய்ப்பு ஏற்படுகின்றது. சமுத்திரப் பகுதியை நோக்கும்போது தற்போது தினந்தோறும் இருபதாயிரம் கலன் எண்ணெய் சமுத்திரத்தில் கலக்கப்படுகிறது. இதனால் கடல் வாழ் உயிரினங்கள் அழிவடைகிறது. இவற்றை உண்ணும் மனிதரும் நஞ்சூட்டப்படுகின்றனர். மேலும் தொழிற்சாலைக் கழிவுப் பொருள்கள் கடலில் சேர்க்கப்படுகிறது.

கப்பல்களில் இருந்து வீசப்படும் அளவற்ற மதுபானம் மற்றும் வெற்றுத்தகரங்கள் கடலில் வாழும் உயிரினங்களுக்குத் தீங்கை ஏற்படுத்துகிறது. கடலில் இரசாயன ஆயுத யுத்தங்கள், அணுப்பரிசோதனைகள், டைனமேற் மூலம் மீன் பிடித்தல் போன்றவற்றால் கடல் உயிரினங்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன. கூடவே மருத்துவக் கழிவுகள், நச்சுக் கழிவுகள் (Toxic Waste) கடலில் கலப்பதனாலும் மண்ணிற் கலப்பதனாலும் உயிரின அழிவுகள் ஏற்படுகின்றன. இதனால் பெருமளவான கடல் வாழ் உயிரினங்கள் அருகி வருகின்றன. இந்நஞ்சுக் கழிவுகள் கடலில் கலந்திருக்கும் போது நீரானது பெருமளவில் ஆவியாக் கத்திற்குட்படுகின்றது. ஆவியாக மேலெழும் நீருடன் இந்நச்சுத் தன்மையான மூலகங்களும்கலந்திருப்பதால் அவை வளிமண்டலத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

அடுத்து வளிமண்டலம் மாசடைவதை எடுத்துக் கொண்டால் புவியின் தென் துருவத்திற்கு மேல் காணப்படும் ஓசோன் படலமானது அதிக பிராணவாயுவைக் கொண்டதாக காணப்படுகிறது. இதனால்அல்ரா வைலற் கதிர்கள் புவியை நோக்கி வருவது தடுக்கப்படுகிறது. இதில் துவாரம் ஏற்பட்டதனால்புவி மேற்பரப்பு அதிக வெப்பமடைய சாத்தியமுண்டு. இது இரசாயன வாயுச் சேர்க்கையினால் ஏற்பட்ட தொன்றாகும். மேற்படி ஓசோன் படையானது இயற்கையானது.

இதை விட செயற்கையான ஓசோன் படை அமைப்பு ஒன்று புவிமேற்பரப்பிற்கு அண்மையில் இருப்பாதாகக் கூறப்படுகிறது. இதுவும் இரசாயன வாயுக்களால் மாசடைய வாய்ப்புண்டு.இதன்பிரதிபலிப்பாக நுரையீரலைத் தாக்கும் அச்சுறுத்தல் ஏற்படலாம். மேலும் தாவர வளர்ச்சியும் பாதிக்கப்படும்.

நைத் திரைட் ஒக்சைட் முன்பு 15 மில்லியன் தொன் இருந்தது. தற்போது 47 மில்லியன் தொன்னாக உள்ளது. 2000ம் ஆண்டளவில் இது இருமடங்காக அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

கடந்த 30 வருடங்களில் இது 60 வீதத்தால் அதிகரித்துக் காணப்படுகிறது. கைத்தொழில் சாலைகளில் இருந்து வெளிவிடப்படும் நச்சுப்புகையாலும் ஏனைய புகைமண்டலத்தாலும் வளிமண்டலம் மாசடைவதே இதற்குச் காரணம் இந்த ஓசோன் படை மண்டலததில்10 வீதம் ஓசோன் குறைவுறுமானால் வெப்பம் புவி மேற்பரப்பில்10 வீதம் அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது. இதனால் துருவப் பகுதிப் பனிக்கட்டிகள் உருகி கடல் மட்டம் உயர்ந்து பல நாடுகள் கடலுக்கடியில் செல்லும் வாய்ப்புண்டு.

அத்துடன் குளோரோ புளூரோ காபன் ஆனது வளி மண்டலத்தில் சேர்வது மிக ஆபத்தானதாகும். வளிமண்டல மூலக்கூறுகளின் செயற்பாட்டு மாற்றத்தாலும் அங்குள்ள வளியின் கார அமிலத் தன்மைகளைப் பொறுத்தும் அங்கு அமிலத்தன்மை கூடுதலாகக் காணப்படுமிடத்து அமில மழை ஏற்படுகின்றது. இரத்தமழை, நீலமழை என்பனவும் இவற்றின் விளைவே. இது மண்ணுடன் கலக்கும் போது அதில் மாற்றத்தைஏற்படுத்துகிறது இதன் காரணமாக நீரின் தன்மையும் மாறுபடுகிறது. விண்வெளியில் நடைபெறும்நட்சத்திரப்போர்களும்வளிமண்டலக்கட்டமைப்பைப் பாதிக்கின்றது. இவற்றால் சூழற் சுகாதாரமானது பாதிப்படைகிறது.

செல்வி ஐ. ஜெ. இரத்தினம்

அ 7— ம் பக்கம் பார்க்க

# திருக்கேதீஸ்வரம் தேர்த்திருவி


## நீங்காத வினையெல்லாம் நீக்கும் திரு

### மூலமூர்த்திச் சிறப்பு

''அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் ஆதியும் அந்தமும் மில்லாத அரும் பெரும் சோதியாகி இறைவன், தம்மை மெய்யன்புடன் வழிபடுவோருக்கும் ஏனைய உயிரினங்களுக்கும், அருள் புரியும் பொருட்டு தனது அருவ நிலையினின்றும் நீங்கி அருவுருவத் திருமேனியாகவும், உருவத் திருமேனி கொண்டும் எழுந்தருளி இருக்கும் இடமே ஆலயம், அல்லது திருக்கோயில் எனப்படும். ''அருவமும் உருவமுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய் பிரம்மமாய் நின்ற சோதியான'' அவர், அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்க வடிவம் கொண்டு திருக்கேதீச்சரத்தில் ஆனந்தமூர்த்தமாக எழுந்தருளி இருந்து, ஆன்மாக்களுக்கு அருள் புரிகிறார். சிவலிங்கப் பெருமான் அருவ நிலையில் நின்று அருவ சிவத்துடன் தொடர்பு கொண்டு படைத்தல் முதலிய ஐந் தொழில்களைச் செய்வதற்கும், உருவ நிலையில் இருந்து உலக மக்களுக்கு அருள் புரிவதற்குமாக அருவுருவ வடிவம் கொண்டுள்ளார். கிவலிங்கத்தில் கண்ணால் காணவல்லது உருவம். இன்னது என்று கூறமுடியாமலும், உறுப்புகள் இல்லாமலும் இருப்பது அருவம். ஆகவே உருவம் உண்டு உறுப்புக்கள் இல்லை, இந்த இரண்டு தன்மைகளையும் பெற்றதால் சிவலிங்கவடிவம் அருவுருவத் திருமேனி எனப் படும். இத்தோற்றமே இங்கு மூலமூர்த்தமாக பிரகாசித்துக் கொண்டு அடியார்களுக்கெல்லாம் அருள் பாலித்தவண்ணம் இருக்கின்றது,

### தல விசேடம்:

திருஞானசம்பந்தப் பெருமானால் ''தொண்டர் நாள் தொறும் துதி செய அருள் செய்யும் கேதீச்சரம் அது தானே'' என நினைந்துருகும் அடியாருக்கு அருட்பிரவாகத்தை அள்ளி வழங்கும் திருக்கேதீச்சர நாதனின் புகழ் அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. தென் கைலாயம் எனப் போற்றப்படுவது இத் திருக்கேதீச்சரசிவத்தலம். இது பாலாவித் தீர்த்தக் கரையோரத்தே திகழ்வது பெருமைக்குரியது, திருமால், பிரமன், இந்திரன், தேவர்கள், கந்தருவர், வித்தியாதரர், கின்னரர், கேதுபகவான், துவட்டா, ஸ்ரீராமர், அகத்தியர், இராவணன், மாலியாவான் அருச்சுனன், முதலியோர்களால் பூசிக்கப்பெற்ற சிறப்புக்குரியது. கி. பி. 7-ம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தராலும் 8-ம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடல் பெற்றதுடன், சோழ மன்னர் ஆதரவையும்பெற்றது இராமேஸ்வரத்தின் எதிர்க் கரையில் உள்ள இத்திருக்கேதீஸ்வர திருத்தலம்.



### திருக்கோயில் அமைப்பும் சுற்றாடலும்

திருக்கேதீச்சர திருத்தலமானது, திருக்கேதாரம், காசி, காஞ்சி, திருவண்ணாமலை, சிதம்பரம், திருவாரூர், மதுரை போன்ற திருக்கோயில்களுள் ஒன்று என்றும், இங்கே சிவ பெருமான் லிங்கமூர்த்தியாக, என்றும் பிரியாது எழுந்தருளியுள்ளார் என்றும் நூல்கள் கூறும். இத் திருக்கோயில் நீர் வளம், நிலவளம், செல்வவளம் நிறைந்தோங்கிய மாதோட்ட நன்னகரில் சிவபுண்ணிய புனித தீர்த்தமாகிய பாலாவியின் வடபால் அமைந்து,


உங்களுக்குத் தேவையான சகல விதமான
துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்களையும்,
மற்றும் வீட்டுத்தேவைக்குரிய எல்லாவில
பலசரக்குச் சாமான்களைவும் மலிவு
விலையில் பெற பூநகரியில்,

**பூநகரி ஸ்ரோர்ஸ்**
( வி. பரமநாதன் )
வாடியடி, பூநகரி.



எமது நாட்டு மூலவளங்களிலிருந்து தரமான உள்ளூர் உற்பத்திகள் தயாராகின்றன.
இவற்றை ஊக்குவிப்பதன் மூலம் பொருளாதார வளம் நிறைந்த தமிழீழ சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடுவோம்.
சுத்தமும், சுவையும் நிறைந்த பதனீர், பனம் பானம், பனை வெல்லம் ஆகியவற்றின்
உற்பத்தியாளர்களும் தெங்கு உற்பத்திப்பொருட்களின் மொத்தசில்லறை கொள்வனவாளர்களும், விற்பனையாளர்களும்.

**பூநகரி தெங்கு பனம் பொருள்**
**உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்**
(மட்டுப்படுத்தப்பட்டது)
**பூநகரி**

பதிவு இல: P/A 51, 9.3.72



**பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
(வரையுள்ளது)

புடவை வகைகள், பாடசாலை உபகரணங்கள், உரம் கிருமிநாசினி களைகொல்லிகள், கட்டிடப் பொருட்கள், எரிபொருட்கள், நுகர்ச்சிப் பொருட்கள், நெல் கொள்வனவு, மிளகாய் கொள்வனவு

அரிசி ஆலை (உற்பத்திப் பகுதி - பாவனையாளர் பகுதி) கேரதீவு - சங்குப்பிட்டி (வள்ளம்-பாதைச்சேவை) ஒப்பந்த வேலைகள், பந்தல், கதிரை சேவை, அந்தியகால சேவை கூட்டுறவு மகளிர் சுயவேலைவாய்ப்புத்திட்டம், (பனம் தும்பு அடித்தல், வாழை நார்தும்பு அடித்தல், கயிறு உற்பத்தி, புற்பாய் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, கற்பூரம் உற்பத்தி) உள்ளூர் உற்பத்திக்குக் கொள்வனவும், சந்தைப்படுத்தலும்

மற்றும் சூரியசக்தியிலிருந்து மின்பெறும் பொறிமுறையும் ஆலோசனையும் மற்றும் பல துறைகளை உள்ளடக்கிய சேவைகளைச் செய்து வருகின்றது.

மக்களின் தேவை

**பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சேவை**

Duty is power which rises with us in the morning and go to bed with us in the evening.

# ...ிழா 05-06-90

# ...ிருக்கேதீச்சரத்தான்

கிழக்கு நோக்கிய ஐந்தடுக்கு நிலையினைக் கொண்டஇராச கோபுரத்தை கம்பீரமாகக் கொண்டு கிராமத்தின் நடுவே விளங்குகின்றது.கோபுரத்தின் இருபக்கங்களையும் சார்ந்து தொடர்ந்து நான்கு பக்கமும் சுற்றிய மதில்கள் கருங்கல்லாலும் செங்கல்லாலும் செவ்விய முறையில் அமைந்துள்ளன.

சுவாமி சந்நிதி கிழக்கும், அம்பாள் சந்நிதி தெற்கும் நோக்கி உள்ளன.சுவாமி சந்நிதி திருவாசலில் இராசகோபுரம் அழகாக மிளிர்கின்றது. அம்பாள் சந்நிதி திருவாசலுக்கு தெற்கே மதிலும் தென்புறத்தேயுள்ள வாசலையொட்டிய அழகிய சிற்ப வேலைப்பாடுடன் அமைந்த கோபுரமும் அமைக்கப் பட்டிருக்கின்றது.இராசகோபுர இடப்பக்கத்தில் பூசைக்காலங்களில் அடிக்கப்படும் பேரொலியுடன் கூடிய நாதம் எழுப்பும் வெங்கல மணி உயரக் கம்பீரமாக காட்சி தருகிறது. கோயில் உட்புறத்தே இராச கோபுர இருமருங்கிலும்,சூரிய சந்திரர்க்கு சந்நிதிகள் உள்ளன.சனீஸ்வரர் கோயில், நவக்கிரக மண்டபம்,சண்டேசுரர் கோயில் முதலியனவும் அமைக்கப்பட்டுள்ளன. கர்ப்பக்கிரகம்,அர்த்த மண்டபம், மகாமண்டபங்களைச் சுற்றிச் செல்வது முதலாம் பிரகாரம் களஞ்சிய அறை,மடைப்பள்ளி ஆகியன இரண்டாம்' பிரகாரத்தில் உள்ளன. தென்பாக பத்தி மண்டப வரிசையில் பதிகம் பாடிய சம்பந்தர், கேது பகவான்,சமய குரவர் நால்வர்,சேக்கிழார்,சந்தான குரவர் நால்வர். திருமுறைகள் வேதாகம பூசை அறை,பதிகம் பாடிய சுந்தரர் ஆகியோரைப் பிரதிஷ்டை செய்துள்ளனர்.மேற்குப் பிரகாரத்தில் விநாயகர்சோமாஸ்கந்தர்மகா விஷ்ணு, மகாலிங்கம் (அகழ்ந்தெடுக்கப்பட்ட பழைய சிவலிங்கம்) பஞ்சலிங்கம், மகாலட்சுமி, சுப்பிரமணியர், திருமூர்த்தங்கள் தனித்தனியே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.வடபிரகாரத்தில் தென்முகமான வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமான், தேவசபை சோமாஸ்கந்தர், பள்ளியறை,ஸ்ரீ நடராச மூர்த்தி ஆகிய மூர்த்தங்கள் உண்டு.கிழக்குப் பிரகாரத்தில் கருவூல அறை,யாகசாலை பைரவர் சந்நிதி அமைந்துள்ளன.

சுவாமி சந்நிதிக்குக் கிழக்கே திருமண்டபத்திற்கு நேராக பலிபீடமும் நந்தியும்உள்ளன. சுர்ப்பக்கிரகக் கோவிலின் வெளிப்புறச் சுவரில் தென்பால் விநாயகர், தட்சணா மூர்த்தி,மேற்கே லிங்கோற்பவர்,வடபால் பிரமா,துர்க்காதேவியும், கோமுகத்திற்கு அண்மையில் தனிக்கோயிலாக சண்டேசுரர் மூர்த்தமும் உண்டு.இவை தவிர மகாமண்டபத்தில் விநாயகர், பிரதோஷ மூர்த்தி,சிவன் வாசலருகே துவாரபாலகர் இருவர், அம்பிகை வாசலருகே துவார சக்திகள் இருவர் உள்ளனர். இராச கோபுரத்திற்கு வெளியே இருமருங்கிலும் தென்புறமாக விநாயகரும், வடபுறமாக சுப்பிரமணியரும் தனித்தனியே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். இராச கோபுர வாசலுக்கு வெளியே கோபுரத்தையும் உள் மூல கொடித்தம்பத்தையும் பார்த்த வண்ணம் பெரிய நந்தி (அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்டது) ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.இதன் வடபுறமாக உற்சவ கால நிகழ்ச்சிகள் நடக்கும் வசந்த மண்டபம் கம்பீரமாக காட்சிஅளிக்கின்றது.மூன்றாம் சுற்றுப்பிரகார வீதியின் கிழக்கே மதிலின் உட்புறமாக தென்திசையில் வாகன சாலையும், வடதிசையில் களஞ்சிய அறையும் உண்டு.

இத் திருக்கோயிலின் நான்கு வீதிகளிலுமுள்ள மடங்களுக்கு முன்புறத்தே நான்காம் பிரகாரமாய் தேரோடும் திருவீதிகள் அமைந்துள்ளன. திருக்கோயிலின் வடபால் நந்தவனம் அந்தணப் பெருமக்கள் விடுதி கோயிற் சிற்பந்திகள் தனிப் பட்டோரின் வீடுகள் முதலியனவும் கிழக்கே தேவஸ்தான காரியாலயம் விற்பனைக் களஞ்சியம் சைவசித்தாந்த நூல்நிலையம், நீர் விநியோக நிலையம் மின் வெளிச்ச நிலையம் தென் கிழக்கில் நூல் நிலையம், தபால் நிலையம் தனியார் தேநீர் பலசரக்கு கடைகள் என்பனவும், பாடசாலை, மருத்துவ நிலையம் கிராமிய வங்கி, கூட்டுறவுப் பண்டகசாலை, தனியார் வீடுகள் என்பனவுண்டு.

இவற்றைவிட கிழக்கு வீதியில் திருஞான சம்பந்தர் மடம் சுந்தரர் மடம் நாட்டுக் கோட்டை நகரத்தார் மடம் அம்மா மடம் பசு மடம் பூநகரி மடம் கொழும்பு அம்மா மடம் ஆகியனவும் மலேசிய சைவ அன்பர்களால் தாபிக்கப்பட்ட இரு மடங்களும் உண்டு. இவற்றில் ஒன்று சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் பெயரிலும் மற்றையது சிவமணி கந்தையா வைத்தியநாதன் பெயரிலும் விளங்குகின்றது. தென்புறமாக சபாரத்தின சாமி மடம் சிவராத்திரி மடம் சிற்பிகள் தங்குமிடம் என்பனவும் மேற்கே திருவாசகமடம் திருப்பதி மடம் கௌரீசர் மடம் சிவானந்த குருகுலம் என்பனவும் வடபால் நரசிங்கர் மடம் அப்பர்(சிவபூசை) மடம் கதிர்காம மடம் மாதுவட்டா மணி மண்டபம் திருக்குறிப்புத் தொண்டர் மடம் என்பனவும் இருந்து திருவீதிகளை சிறப்பிக்கின்றன. இம்மடங்களில் விழாக்காலங்களில் அடியார்கள் திருக்கூட்டமும் அன்னதானமும் வழிபாடுகளும் நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாகும். குறிப்பாகத் திருவாசக மடத்தில் காலத்துக்கு காலம் விழாக்களும் பூசை வழிபாடுகளும் மகேசுவர பூசைகளும் தவறாமல் நடைபெற்று வருகின்றது. இங்கு ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தின் ஸ்தாபகரில் ஒருவரான சிவஸ்ரீ சரவணமுத்து சுவாமியார் அவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

...தியாக, ...ழுந்தரு ...நூல்கள் ...ல் நீர் ...வவளம் ...தாட்ட ...ண்ணிய ...பாலா ...மைந்து,

...வ

பலர் மீண்டும் நாடு திரும்ப ஆவல்

## வெளிநாட்டில் தொழில் புரிவோரிடமிருந்து கடந்த ஆண்டில் 2780 முறைப்பாடுகள்

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையரிடம் இருந்து கடந்த ஆண்டில் மட்டும் 2780 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவற்றுள் பெரும் பாலானவை மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாக கடமைபுரியும் இலங்கைப் பெண்களிடம் இருந்தே கிடைத்துள்ளன.

தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் வெளிநாட்டுவேலை வாய்ப்புப் பணியகத்திற்கு கிடைத்த முறைப் பாடுகளில் இருந்து வீட்டுப் பணிப் பெண்களிடமிருந்து 2438 முறைப் பாடுகளும், வேறு தொழில்களில் ஈடுபடுவோரிடம் இருந்து342முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தெரிய வருகின்றது.

கிடைத்த முறைப் பாடுகளில் இருந்து 2500 க்கு அதிமானவை தீர்த்து வைக்கப் பட்டுள்ளன எனவும், 271 முறைப்பாடுகளே இன்னமும் தீர்க்கப் படவுள்ளன எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஏஜமானின்தொல்லை, சம்பளம் வழங்கப்படாமை, வேலைஒப்பந்தங்களை மீறல், காணாமற் போதல், இறப்பு போன்றவை தொடர்பாகவே இந்த முறைப்பாடுகள்கிடைத்துள்ளன.

வெளி நாடுகளில் வேலை பார்க்கும் இலங்கையர்களில் கடந்த ஆண்டில் காணாமல் போன அல்லது இறந்தவர் எண்ணிக்கை 37 ஆகும்.

சம்பளம் ஒழுங்காக வழங்கப் படாது, வீட்டு ஏஜமானின் தொல்லைக்கு 1186 பேர் ஆளாகியுள்ளனர்.

இலங்கைக்குத் தகவல்கள் எதுவும் அனுப்ப முடியாது 727 பேர் கஷ்டங்களை எதிர் நோக்கி உள்ளனர்.

கடந்த ஆண்டில் 37 வழக்குகள் வேலை வாய்ப்புப் பணியகம் மூலம் தொடரப்பட்டது. இவைதவிர கடந்த ஆண்டில் பொலிஸாரினால் தொடரப்பட்ட 38 வழக்குகளுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் சாட்சிஅளித்துள்ளது. (7 கி)

## 40வதுபொதுக் கூட்டம் அடுத்த மாதம்

இலங்கை கணக்காளர் சேவைச் சங்கத்தின் 40வது வருடாந்த பொதுக்கூட்டம் யூலை மாதத்தில் நடைபெறவுள்ளது.(4-கி)

## பத்திரிகைச் சுதந்திரமா? பற்றி எரியும் சுதந்திரமா?

நாள் இதழையா தீயி லிட்டனர்? — தம்
நாக ரிகத்தையே தீயி லிட்டனர்!
'முரசொலி' யையா நெருப்பி லிட்டனர்? — தம்
மூளை தன்னையே நெருப்பி லிட்டனர்!

குண்டு வைத்தனர்!
கொன்று நின்றனர்!
என்ற போதினும் 'முரசொலி'க் குமே! அதைக்
கண்டு நின்றுமா,
காகிதத்தை நீர்
கருகவிட்டுளீர்? கரம் வலிக்குமே! — எமைத்

துண்டு செய்யினும்,
தோள் நிமிர்த்துவோம்!
உண்டு நீதியாம்; உமை எரிக்குமே! — வாள்
கொண்டு வெட்டினும்,
கொள்கை விட்டிடோம்!
வென்று சுற்றுவோம்; விதி பலிக்குமே!

- பாரதிசீலன்

## அடிக்கல் நாட்டப்பட்டது

(பருத்தித்துறை)

மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலத்தில் சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மாடிக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா அதிபர் என். சிவபாதசுந்திரம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

புலோலி கொத்தணி அதிபர் வீ. எஸ். ஏகாம்பரநாதன் அடிக்கல்லை நாட்டி வைத்தார். இவ் அடிக்கல்லை நாட்டும் விழாவிலே எம். பொன்னையா உட்பட இன்னும் பலர் உரையாற்றினார்.

## தியாகசீலம் புரைமைப்பு

(சங்கானை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மானிப்பாய் — யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள 'தியாகசீலம்' சிறுவர் பூங்கா தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. சிறுவர்கள் விளையாடுவதற்கு நவீன வசதிகள் இங்கு செய்யப்பட்டு வருகின்றது. (கி31)

## மா மரங்களுக்கு மருந்து தெளிக்க விசேட ஏற்பாடு

(உடுவில்)

மாமரங்களுக்கு மருந்து தெளிப்பதற்கான விசேட தெளிகருவியொன்று தொல்புரம், புத்தூர், கீரிமலை, உடுவில் ஆகிய கமநலசேவை நிலையங்களுக்குப் பொதுவாக உடுவில் கமநலசேவை நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படுவோர் பெரும்பாக உத்தியோகஸ்தருடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப2கி)

## பாஷையூர் கடலின் நடுவில் புனித அந்தோனியார்



பாஷையூர் தண்டபோல் கழகத்தின் முயற்சியால் மக்களின் உதவியுடன் பஷையூரில் கரையிலிருநது கடலின் 1000 அடி தூரத்தில் அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் சொரூபம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாஷையூர் பங்குத்தந்தை வணபிதா A. பிரான்சிஸ்அடிகளாரால்திறந்துவைக்கப்படவுள்ளது

## முரசொலிக்கு வந்த கடிதம்

# பாதிப்பு எமக்கும் தான்; நிவாரணம் மட்டும் எமக்கில்லை:

ஆசிரியர்
முரசொலி

கடந்த மாதம் தங்கள் பத்திரிகையில் வெளியான செய்தி ஒன்றைப் பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அது என்ன வெனில் ஆசிரியர்களுக்கும் 'இடர் நிவாரணப்பணம் மேமாதம் முதல் வழங்கப்படும்' என்பதேயாகும். இதன்படி இந் நிவாரணப்பணம் மே மாதம் முதல் வழங்க வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியும் வெளிவந்தது.

ஆனால் இவ்விடர் நிவாரணப்பணம் இதே காலப்பகுதிகளில் கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் இருந்து பயிற்சி முடித்துக்கொண்டு வெளியேறிய வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த எம் போன்ற ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கப்படவில்லை என்பது வேதனை அளிக்கின்றது.

வடக்கு கிழக்கில் இருந்த ஏனைய அரச ஊழியர்கள் எதிர்நோக்கிய கஷ்டங்களை நாம் எதிர்நோக்கிய போதும் நிவாரணப்பணம் வழங்குவதில் மட்டும் பாரபட்சம் ஏனோ?

தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆசிரிய பணிகளை மேற்கொண்டிருக்கும் எம்போன்ற பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு நாம் தற்போது கல்வி கற்பிக்கும் பாடசாலைகளில் அல்லது நாம் முன்பு பயிற்சி பெற்ற ஆசிரிய பயிற்சி கலாசாலைகளில் இந் நிவாரணப்பணத்தை வழங்க வடக்கு கிழக்கு கல்வி அமைச்சு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகிறோம்.

கலஹா தமிழ் மகா வித்தியாலயம்,
கண்டி

அ. கிருபானந்தன்
நா. கேதீஸ்வரன் கு. வாகீசன்,
க. உலகேஸ்வரன்,
(ஆசிரியர்கள்)

# தெல்லிப்பழை வைத்தியசாலை ஏன் இந்த அவலநிலை?

ஆசிரியர்
முரசொலி

30-ம் திகதி புதன்கிழமை இரவு பத்து மணியளவில் எனது தாயாரின் சுகவீனங்காரணமாக தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு எனது அன்னையை எடுத்துச் சென்றேன்.

வைத்தியசாலைப் புகுமுகநிலையத்தில் யாருமே இல்லாததால் எனது தாயருடன் உட்சென்றேன். அங்கே ஓர் நபர்-ஒருவர் மட்டுமல்ல-பலர் மேசைமேல் கால்நீட்டி கதிரையில் இருந்தபடி பத்திரிகையில் மூழ்கியிருந்தனர். என் கண்ணில் பட்ட முதல்நபரிடம் எனது வருகையின் நோக்கத்தைக்கூறி அம்மாவின் நோய்க்குச் சிகிச்சைபெற வேண்டியதைச் செய்து தவுமாறு வேண்டினேன்,

அவர்தான் புகுமுகக் காவலாளியென்றும் தன்னால் எதுவும் செய்யமுடியாதென்றும் கூறினார். யான் உமதிடம் இது வல்வே என்று எனது மனநிலையில் கூறினேன், இதைக் கேட்க நீர்யார்? வந்த அலுவலைப் பார்த்துக் கொண்டு போகும்படி கூறினார். எனது பணத்திலும்தான் பத்திரிகை வாசித்துக்கொண்டு கடமைபுரிகிறார். என்பதை அறியாதவர்-பரிதாபம் இவருடன் இருந்தவர்கள் யாருமே நோயாளியான எனது அன்னையைப் பற்றியோ அன்னையைக் காப்பாற்றும் ஆவலைப்பற்றியோ கவனம் எடுக்கவில்லை.

ஆகவே சற்று உட்சென்றேன். மருத்துவதாதியர் கவனிப்பாளர்கள் யாவரும் மாநாடு நடாத்திக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கும் எனது தேவையைத் தெரியப்படுத்தினேன். கவனிப்பார் யாரும் இல்லை. எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் வைத்தியரைச் சந்தித்து அன்னையை நோயாளிகளைப் பரிசோதிக்கும் இடத்திற்குச் கொண்டு சென்று பின் நோயாளரைத் தங்கவைக்கும் வார்ட்டுக்கு கொண்டு சென்றேன்.

இத்தனைக்கும் பின் சில பெண்மணிகள் உலகம் புகழ் புளோரன்ஸ் நைட்டிக்கேலின்-வாரிசுகள் இருவர், இன்னும் இருவருடன் வருகை தந்தனர். எனது அன்னையை உயிரை காப்பாற்றச் சென்ற எனக்கு நேர்ந்த நிலை என் போன்றவர்களுக்கும் ஏற்படக்கூடாதென்ற ஆசையால் இதைக் தங்களை மேலான கவனத்திற்குப் கொண்டு வருகிறேன்.

வீமன்காமம்
தெல்லிப்பழை.

க. சுதா

# நயினை-குறிகாட்டுவான் சேவை அரச மோட்டார் படகு

நயினாதீவு மக்கள் தங்களது கடற்பிரயாணத்தை கஷ்டமின்றி மேற்கொள்ளுவதற்காகவும் கட்டுப்பாடற்ற பிரயாணக்கட்டண உயர்வை தடுத்து நிறுத்தும் நோக்குடனும் குறிகாட்டுவான் நயினாதீவு இறங்குதுறைகளுக்கிடையில் நிரந்தரமான அரச மோட்டார் படகுச் சேவை ஒன்றை ஆரம்பித்துதவுமாறு யாழ் ஆசாங்க அதிபரைக் கேட்டிருந்தர்னர்.

அதற்கு யாழ் அரசாங்க அதிபர் வெகுவிரைவில் இப்படகொன்றைத் தருவதாக உறுதி அளித்திருந்தார்.

அவரின் உறுதி மொழியின் பிரகாரம் நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவ காலத்தில் இந்த மோட்டார் படகுச் சேவை ஆரம்பிக்கப்படலாம் எனக்கூறப்படுகின்றது. (19 கி)

## கல்வி அமைச்சர் லலித் அறிவிப்பு

# பாடசாலை மாணவர் அனுமதியில் சீரான கொள்கைஅமுலாகும்

அடுத்த வருடம் முதல் நாட்டிலுள்ள சகல அரசாங்க பாடசாலைகளிலும் மாணவர்களை அனுமதிப்பதில் ஒரு சீரான கொள்கை கடைப்பிடிக்கப்படுமென கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

அண்மையில் கல்வியமைச்சில் நடைபெற்ற பிராந்திய கல்விப்பணிப்பாளர் மகாநாட்டிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

முதலாம் ஆண்டுக்கு பிள்ளைகளை அனுமதிப்பதில் ஒவ்வோர் பாடசாலையும் நேர்முகப் பரீட்சைத் திகதியை பகிரங்கமாக அறிவித்து மாணவர் பெற்ற திறமைகளை ஒளிவு மறைவு இன்றி வெளியிட வேண்டும்.

அனுமதிக்கப்படும் பிள்ளையின் தகைமைகள் (வதிவிடம்உட்பட)பற்றிய விபரங்களை நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த அனைத்துப் பெற்றோரின் முன்னிலையிலும் பகிரங்கப்படுத்த வேண்டும்.

இதேவேளை ஏதாவது தகைமை பற்றி ஆட்சேபனை இருப்பின் ஆகஸ்ட் 31-ம் திகதிக்குள் தெரியப்படுத்த வேண்டும். ஆண்டு 6 ஐப் பொறுத்தவரை இனிமேல் எந்தப்பாடசாலையிலும் அனுமதிப்பரீட்சை ஏதும் நடாத்தப் படக் கூடாது. எனவும் கண்டிப்பான உத்தரவுகளை அமைச்சர் அங்கு பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கு விடுத்தார்.

புலமைப் பரீட்சையில் தேறும் மாணவர்களின் எண்ணிக்கை 25 ஆயிரமாக அதிகரிக்கப்பட இருப்பதால் இப் பரீட்சையில் தேறிய மாணவர்களே விரும்பிய பாடசாலைகளில் அனுமதிக்கப் படுவர்.

பாடசாலைகளின் அபிவிருத்தியை கவனிக்க அந்தந்தப் பாடசாலைகளில் ஒவ்வோர் அபிவிருத்திச்சபையும்அமைக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

ஓய்வு பெறும் ஆசிரியர்கள் தமது சேவை விபரங்களை சத்தியக்கடதாசி மூலம் தெரிவிக்கலாம் என்றும் பின்னர் சம்பந்தப்பட்ட விபரங்கள் தவறு எனக் கண்டு பிடிக்கப் பட்டால் சம்பந்தப்பட்டவர்களின் ஓய்வூதியம் நிறுத்தப் படும் இன்றும் அமைச்சர் தெரிவித்தார். (8 கி)

## மாகாண கல்விப்பணிப்பாளர் தகவல்

# தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 80வீதகோரிக்கைநிறைவேறியது

வவுனியாவிற்கு உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்டு வந்திருந்த வட/கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் திரு ஈ. ஜே. சற்குணராஜாவுக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை தேநீர் விருந்து அளித்துக் கௌரவித்தது.

இவ் வைபவத்தில் பேசிய திரு. சற்குணராஜா தெரிவித்ததாவது;

நாங்கள் ஆசிரியர்களுக்குரிய பிரச்சினைகள் தொடர்பாக நீங்கள கேட்கும் எல்லாவற்றையும் உடனே செய்ய முடியாது. ஆனால் முக்கிய தேவையின் அடிப்படையில் அவற்றை கட்டாயம் நிறைவேற்றுவேன்.

இலங்கை தமிழர் ஆசிரிய சங்கம் என்னிடம் கேட்ட வேண்டுகோள்களில் 80சதவீத மானவைகளை நிறைவேற்றியுள்ளேன் என்றார்.

வைபவத்தில் வவுனியாக் கல்விப் பணிப்பாளர் எஸ். நவரட்ணராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ. கே. நாகராஜா ஆகியோரும் பங்கு கொண்டனர். வவுனியாக் கிளைச் செயலாளர் கே. சிவஞானம் நன்றியுரை தெரிவித்தார். (11.கி)

# மருதங்கேணியில் மீன்பிடிதொழில்நுட்பப் பயிற்சி நெறி

யாழ். கல்வித் திணைக்கள முறைசாரக் கல்விப்பிரிவின் மீன்பிடித் தொழில் நுட்ப மோட்டார் இணைப்புப் பயிற்சி நிலையம் மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. முதலாம் திகதி வெளியான முரசொலியில் இடம் பெற்ற 'மீன்பிடி தொழில்நுட்ப விருத்திக்கு முறைசாரா கல்விப் பிரிவின் பயிற்சி,' என்ற செய்தியில் இந்த நிலையம் காங்கேசன் துறையில் இயங்கவுள்ளதாக தவறாக குறிப்பிடப் பட்டு விட்டது. (கி)

# அமைச்சு அறிவிப்பு

(மட்டக்களப்பு)

பயங்கரவாத சம்பவத்தில் மரணமானவரின் மரணச்சடங்கு செலவிற்கென வழங்கப் படும் நிவாரணத்திற்கு விண்ணப்பிப்போர் மரணம் சம்பவித்து 14 நாட்களுக்குள் தமது பகுதி உதவி அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்க வேண்டும் எனப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கடும் பாதிப்புற்றோருக்கு மேற்படி மரணச் செலவு நிவாரணமாக 2000 ரூபா வழங்கப் பட்டு வருவது குறிப்பிடத் தக்கது. (05)

# மகாகும்பாபிஷேகம்

பருத்தித்துறை அருள் மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 4ம் திகதி நடைபெறவுள்ளது. இம் மாதம் 29ம் திகதி பகல் கர்மாரம்பத்துடன் தொடங்கி மகா கும்பாபிஷேகம் நடைபெறும். இம் மாதம் 18ம் திகதி யந்திர பூசை ஆரம்மாகும் என்றும் தேவஸ்தான பரிபாலகர் அறிவித்துள்ளார் (15கி

## சுவையானசெய்திகள்

# பாட்டி பாம்பு...பாட்டன் பாம்பு

ஆபிரிக்காவில் உள்ள சில மலைவாழ் மக்கள் இன்னும் பாம்புகளைக் கொல்வது கிடையாது. இறந்து விட்ட தமது மூதாதையர்கள் பாம்புகளின் உடலில் புகுந்து தங்களை வாழ்த்துகின்றனர் என்று இவர்கள் நம்புவதே காரணமாம். (7.கி)

# வயிற்றை தடவினால் போதும்

திபெத் நாட்டில் விருந்து சாப்பிடும்போது விருந்தினர்களில் யாராவது வயிற்றைத் தடவிக் காண்பித்தால் வயிற்றுக்கு உணவு பற்றாது என்று அர்த்தமாம். இப்படிச் செய்ய அவர்கள் வெட்கப்படுவதே இல்லை. இக் குறிப்பை அறிந்து விருந்து அளிப்பவர் அவருக்கு மேலும் உணவு பரிமாற வேண்டும். இந்த வழக்கம் திபெத்தியர்களிடம் வழக்கமாக இருக்கின்றது. (7.கி)

# இவருக்கு சங்கடமே இல்லை

அமெரிக்காவில் பிரஸ் பிரவுண் என்பவருக்கு மூக்கே இல்லை. ஆனால் நெற்றியில் ஒரு துவாரம் இருக்கிறது. அதன் மூலமே இவர் சுவாசிக்கின்றார். ஏன் சிகரெட் கூடப் பிடிக்கிறார் இவருக்கு 'மூக்கறுபடும்' நிலை ஏற்படாது... மூக்குக்கு மேலே கோபமும் வராது... (7.கி)

# எல்லாமே மாஜிக்தான்

மாஜிக் நிபுணரான ஒருவர் ஒரு கோடி ரூபா செலவில் கல்கத்தாவில் வொண்டர்லாண்ட் என்ற அதிசய மாயாபுரியை உருவாக்கத் திட்டமிட்டிருக்கின்றார். இது ஓர் ஹோட்டலாகவும் இருக்கும். சர்வர்கள் மாயா ஜாலம் போல் திடீர் என்று வந்து வாடிக்கையாளர்களைப் பரவசப்படுத்துவார்கள். நெருப்பில் நடப்பது, நீரில் நடப்பது, ஓடுவது போன்ற பல காட்சிகளை இரசித்தபடி இங்கு விருந்து சாப்பிடலாம்.

இந்த அதிசய உலகம் பற்றி முழுவிபரங்களைக் கொடுத்தால், அதை எவரேனும் பின்பற்றி தன்னை முந்திக் கொண்டு விடுவார்களோ எனப் பயப்படுகின்றார் இந்த மந்திரக் கோல் மன்னர். (7.கி)

# இன்று நாள் எப்படி?

மேடம்: உடல் ரோகம், பெரியோராசி, தூரத்துப் பிரயாண அலைச்சல், தேடியவர் வருகை.

இடபம்: வாகன சுகம், வணிகர்கள் கடற் தொழில் இயந்திரத் தொழில் மூலம் இலாபம்.

மிதுனம்: மாதாவழி உதவி, வாகன சுகம், வணிகர்கள் இலாபம், தூரத்துச் செய்தியால் நன்னம.

கடகம்: சகோதர வழி உதவி, புகழ் தேடி வரும், புண்ணிய வழிபாடு, கல்வியால் தொழில்.

சிங்கம்: பிரிந்தவர்கள் ஒன்று சேருவர், விவாக நிச்சயம், உயர் பதவி, வணிகர்கள் இலாபம்..

கன்னி: தேடியவர் வருகை, வாகன மாற்றம், மாமன் வழி உதவி, பெண்களால் கவலை.

துலாம்: திருடர் பயம், பொருள் செலவு, வாகன நஷ்டம், தடைப்பட்ட பண வரவு.

விருச்சிகம்: உயர் பதவி, உத்தமர் உறவு, சுகஜீவியம், தேடியவர் வருகை, புதுத் தொழில்.

தனுசு: கல்வியால் தொழில், வணிகர்கள் இலாபம், வாக்குச் சாதுரியம், தடைப்பட்ட பண வரவு.

மகரம்: விவாக நிச்சயம், வாகன சுகம், வணிகர்கள் கடற் தொழில் இயந்திரத் தொழில் மூலம் இலாபம்.

கும்பம்: சுகஜீவியம், வாகன சுகம், வாக்குப் பலிதம், வணிகர்கள் கடற் தொழில் மூலம் இலாபம்.

மீனம்: உத்தமர் உறவு, வாக்குப் பலிதம், வாகன சுகம், உயர் பதவி, தேடியவர் வருகை புதுத் தொழில், ஆலய வழிபாடு.

யாழ். சோதிடர்

ச. அரியநாயகம்

# இணக்கசபைகள் நீதியாகச் செயற்பட வேண்டும்

(வடமராட்சி)

சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதிவழங்குமுகமாகவும் எமது மண்ணில் கட்டுப்பாடு, ஒழுங்கு நடவடிக்கைகளை பேணும் முகமாகவும் எம்மால் அமைக்கப்படும் இணக்கமன்றுகள் நீதியாகவும், நேர்மையாகவும் செயற்பட வேண்டும்.

இவ்வாறு நெல்லியடியில் நடைபெற்ற இணக்க மன்ற உறுப்பினர் தெரிவுக் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரை நிகழ்த்திய நெல்லியடி பிரேதேச மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் குணபால் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு இப்பகுதியைச் சேர்ந்த பல பெரியார்கள் இளைஞர்கள், யுவதிகள் கலந்து கொண்டனர். குணபால் தொடர்ந்து பேசுகையில், இணக்க மன்றுகள் திறம்பட இயங்க வேண்டுமாயிருந்தால் இணக்க மன்று உறுப்பினர்கள் பக்கச்சாராக் கொள்கையுடையவராகவும். லஞ்சம், ஊழல் போன்ற குற்றச் செயல்களுக்கு ஆளாகாதவர்களாகவும் திகழவேண்டும். அப்போதுதான் அதன் புனிதத்துவம் பேணப்படும் என்றார். (44.சி)

# மாவட்டங்கள் தோறும் கைத்தொழில் முயற்சி நிலையங்கள்

மாவட்டங்கள் தோறும் கைத் தொழில் முயற்சி நிலையங்கள் உருவாக்கப்படவுள்ளன.

இதற்கான செயற் திட்டங்கள் யாவும் இம் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் சகல மாகாணங்களிலும் தயாரிக்கப்பட்டு மாத முடிவுக்குள் செயற் படுத்தப்படும்.

கைத்தொழில், விவசாய சேவைத் திட்டங்கள் தொடர்பான தகவல்களை இந்த நிலையங்கள் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கைத்தொழில் மற்றும் விவசாயத் திட்டங்களுக்கான சேவைகளை வழங்குவதற்காகவே இந்த கைத்தொழில் நிலையங்கள் ஆரம்பவிக்கப்பட்டிருக்கின்றன.

கைத் தொழில்களுக்கும், விவசாயத்திற்கும் தேவையான சேவைகளை வழங்க மத்திய நிலையம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருக்கும் பல அரசாங்கநிறுவனங்களில் சிலவற்றிற்கே மாகாண மாவட்ட மட்டத்தில் கிளைகள் இருக்கின்றன.

எனவே ஏற்பட்டுள்ள குறையினை நிவர்த்தி செய்யும் முகமாக மாவட்ட ரீதியாக சகல கைத்தொழில் சேவைகளையும் வழங்கக் கூடிய நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் அவசியம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(7 கி)

# சுருக்கெழுத்துக் கழகத்திற்கு வெளிநாட்டு உதவிகள்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் தட்டச்சு சுருக்கெழுத்துகல்வி அபிவிருத்திநடவடிக்கைகளுக்காக லண்டனில் உள்ள ஸ்கொட் என்ற தமிழர் நலன்புரி அமைப்பு சுமார் 67 ஆயிரம் ரூபாவை அனுப்பி வைத்துள்ளது.

இந்நிதியிலிருந்து கழகம் 29 ஆயிரத்து நூறுரூபாய் பெறுமதியான இரண்டு தமிழ் தட்டச்சு இயந்திரங்களையும் 24 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான இரண்டு ஆங்கில தட்டச்சு இயந்திரங்களையும் எண்ணாயிரத்து 950 ரூபா பெறுமதியான தளபாடங்களையும் கொள்வனவு செய்துள்ளது.

இது தவிர இக் கழகத்துக்கு பிரிட்டிஷ் கவுன்சில் 32 பல்துறை அறிவு நூல்களையும் யூ. எஸ். தகவல் நிலையம் ஆறு ஆங்கில நூல்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளன. (50 கி)

## தேர்தல் நடத்த வேண்டிய நிர்ப்பந்த நிலை

# மக்கள் தரித்திரக் கோல வாழ்க்கை என்கிறார் சிறிமா

பொதுத் தேர்தல் ஒன்றை அரசாங்கம் எச்சமயத்திலும் நடத்தியாக வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநயக்கா கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி லங்கா சமசமாஜக்கட்சி, சிறீலங்கா மக்கள் கட்சி விஜே பிரிவு தேச விமுகதி ஜனதா கட்சிஆகியன இணைந்துநடத்திய பொதுக்கூட்டத்தில் பேசுகையிலேயேஅவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் நாம் ஐ. தே. கட்சியை முறியடிக்கும் வகையில் எம்மத்தியில் ஒற்றுமையைப் பேணிய நிலைமையை ஒன்றிணைந்து எதிர் கொள்ள வேண்டும்.

உலக வங்கி பெருந் தொகைப் பணத்தை உதவ முன் வந்தது. ஆனால் அரசாங்கத்தால்பெருகிவரும்வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாததால் இந்த உதவித் தொகை அதிகளவில் குறைக்கப்பட்டு விட்டது.

வாழ்க்கைச் செலவு உயர்ச்சியினால் மக்கள் பெரும் துன்பப் படுகின்றனர். மக்ககள் தரித்திரர்களாக வீதியின் மத்தியிலேயே இன்றும் வாழ்கிறார்கள் என்றார்.

# உலக உயிர் பாதுகாப்பு வாரம் பிரகடனப்படுத்தக்கோரிக்கை

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளருக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் 19 ம் திகதியிலிருந்து 24 ம் திகதி வரை உலக உயிர் பாதுகாப்பு வாரமாகப் பிரகடனப் படுத்தும்படி கோரியுள்ளது

உலக நாடுகளில் உள்ள சகல சமய சமூக நிறுவனங்களுக்கும் இக் கோரிக்கையின் பிரதிகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் வே. கெ. தனபாலன் பொதுச்செயலாளர் இ ரவகோபால் ஆகியோர் இப்பகிரங்க வேண்டுகோளில் ஒப்பமிட்டுள்ளனர்.

உலக மக்கள் மத்தியில் நிலையான அமைதிக்கு வழிகாட்டுவதற்கு உயிர்ப்பாதுகாப்பு அவசியமாகும் உலகில் தோன்றி உள்ள அமைதியின்மையை அகற்றி அமைதியை ஏற்படுத்தவும் உயிரினத்தைப் பாதுகாக்கவும் உலக உயிர்ப் பாதுகாப்பு வாரம் அனுஷ்டிக்க வேண்டியது அவசியம் என்று யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை வலியுறுத்தியுள்ளது.(36 கி)

## சூழல் மாற்றத்...

— 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

நகராக்கத்தொகைக் முனம் அதிகரிப்பும் சுகாதாரச் சீர் கேட்டில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன. நகரத்தில் வரையறுக்கப்பட்ட பரப்பளவில் அளவுக் கதிகமான மக்கள் வாழும்போது பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இருப்பிடத் தேவைக்காகவும் வாத்தக சேவை நடவடிக்கைகளுக்காகவும் பல அடுக்கு மாளிகைகள் கட்டப்படுகின்றன. இவை காற்றோட்ட வசதி இன்றியும் வெப்ப அமுக்க கட்டுப்பாடின்றியும் போதிய ஒளியின்மை அதிக இரைச்சல் கழிவகற்றல் பிரச்சினை குழாய்நீர் விநியோகச் சீரின்மை மற்றும் போதிய இருப்பிட வசதியின்மை என்பன போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் காணப்படுகின்றன.

கட்டிடங்களை நிர்மாணிக்கத் திட்டமிடுவோர் சுகாதாரம் சம்பந்தமான அறிவின்மை அல்லது கவனமின்மையாகியவற்றால் இத்தகைய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நகர வீதிகள் ஒடுக்கமானதாகவும் வாகன சன நெரிசல் உள்ளவையாகவும் காணப்படும் போது போக்குவரத்துப் பிரச்சினையுடன் வாகன இரைச்சல் புகை என்பவற்றைக் கட்டாயமாக நுகரவேண்டி ஏற்படுகிறது. இதனால் நுரையீரல் சம்பந்தமான நோய்கள் நரம்புத்தளர்ச்சி என்பன ஏற்படுகின்றன.

சிறுவர் முதல் பெரியோர் வரை இன்று புகைபிடிக்கும் பழக்கமானது பெருகியுள்ளது. இதன் நிமிர்த்தம் புகைபிடிப்போருக்கு மட்டுமல்லாது அருகில் இருந்து அதனைச் சுவாசிப்பவர்க்கும் தீங்கை விளைவிக்கிறது. இனை உணராத புகைப்பிடிப்போர் பொது இடங்கள் சனநெரிசல் கூடிய இடங்களிலும் புகைபிடிக்கின்றனர். இதனால் புற்றுநோய் குடற்புண் நரம்புத்தளர்ச்சி போன்ற நோய்கள் ஏற்படுகின்றன புகைப்போர் வெளிவிடும் புகை ஏனையவரைப் பாதிப்பதன் மூலம் சூழல் சுகாதாரத்தைப் பாதிக்கின்றது.

ஒருவர் ஒரு நாளைக்கு 40 சிகரெட் வீதம் தொடர்ந்து 25 வருடங்களுக்குப் புகைப்பார் ஆயின் அவருக்கு 55 வீதம் புற்றுநோய் ஏற்படும் சாத்தியமுண்டு. 1 சிகரெட் புகைப்பது ஆயுட்காலத்தில் 15 நிமிடங்களைக் குறைத்து விடுகிறது. இதன் ஆபத்தை உணர்த்தி மே மாதம் 31-ம் திகதியை உலக புகையிலை ஒழிப்புத்தினமாக பிரகடனப் படுத்திக் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு ஐ. நாவின் உலக சுகாதார ஸ்தாபனமும் தனது நிகழ்ச்சித் திட்டத்தில் முக்கிய நிகழ்ச்சியாகச் சேர்த்துச் செயற்பட்டு வருகிறது.

இந்தியாவின் கோபால் அணி உலைக்கசிவு ரஷ்யாவின் அணு உலைக்கசிவுகளும் பல உயிர்களைக் காவு கொண்டது மட்டுமல்லாது கருவிலுள்ள குழந்தைகளையும் பரம்பரையாகத் தொடரக் கூடிய தாக்கங்களையும் விளைவித்துள்ளது. கதிரியக்கச் செயற்பாடுகளும் கதிரியக்க முறையிலமைந்த நோய்களான சிகிச்சை முறைகளும் கூட சூழலில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மனிதனுக்கும் இயற்கை அன்னைக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பைக் கட்டி எழுப்புவதன் வேகம் கடந்த 10 ஆண்டுகளில் உச்ச நிலையை எய்தி வருகிறது. தொழில் நுட்பத்தின் பெருவெற்றியும் அதனால் ஏற்படும் நலன்களும் இணைந்து மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே பிரிவு ஒன்றினைத் தோற்றுவிப்பது குறித்து அதிக கவலை தெரிவிக்கப் படுகிறது.

வறுமை என்பது சுற்றுப் புறச் சூழல் சுகாதாரச் சீர் கேட்டின் மிகமுக்கிய காரணிகளில் ஒன்று எனலாம். சுகாதாரம் ஆனதும் போஷாக்கானதுமான போதிய உணவு, சுத்தமான உடை, சுகாதாரமான உறையுள், சுத்தமான குடி நீர்வசதி, சுகாதாரமான மலசலகூட வசதிகள் ஆகிய அடிப்படைக் காரணிகளுக்கே அங்கலாய்க்கும் மக்களிடம் சுற்றுப்புறச் சூழல் சுகாதாரம் பற்றிய உணர்வு எப்படி வர முடியும்.

1990ம் ஆண்டில் சுற்றாடல் ஆரோக்கியம் பற்றியும் அதனோடு தொடர்புடைய மனித ஆரோக்கியம் அதன் பாதுகாப்பு அவசியம் என்பனவற்றையும் வளப்படுத்தவும் சுற்றாடற் சுகாதாரத்தையும் முன்னேற்றவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதன் நிமிர்த்தம் வெளியிடப்பட்ட பின்வரும் ஆறு அம்சங்களில் மாற்றத்தை ஏற்படுத்தினால் இதனைத் தெளிவு படுத்தலாம் எனக் கூறப்படுகிறது.

1. சுற்றாடலில் ஏற்படும் ஆபத்துக்களை உய்த்து உணர்தலும் அவை எவ்வாறு உருவாகின. இதற்கான தீர்வுகள் என்ன என்பதனையும்அறிதல். 2. சுற்றாடல் ஆரோக்கியத்திற்குப் புதிய விளக்கத்தைத் தோற்றுவித்தால் இதனைவிஞ்ஞானத் தொழில் நுட்பரீதியில் அணுகுதல். 3. சுற்றாடற் சுகாதாரத்தில் கவனமெடுப்பதற்குத் தேவையான மூல வளங்கள் தொடர்பான பிரச்சனையில் மிக முக்கிய மூல வளமாக மனித வளத்தை எடுத்தல். 4. சமுதாய நலனை ஒட்டிவளங்களின் தன்மையை உயர்த்துதல் மனித நடத்தையால் மனிதனுக்கும், சூழலுக்கும் தீங்கிழைக்காது பாதுகாத்தல், 5. அரசாங்க முயற்சிகளை ஒன்றிணைத்தல். கைத்தொழில் ரீதியில் சுற்றாடற் சுகாதாரத்திற்கு ஏற்ற முறையில் முகாமைத்துவம் அமைய வேண்டும் என வலியுறுத்தல். 6. வளர்ச்சி அடையும் சமுதாயத்தை ஒன்றிணைத்தலும், கைத்தொழில் வியாபாரப் பயிர்ச்செய்கைத் துறைகளில் ஈடுபடுவோரைச் சுற்றாடல் சுகாதாரத்தைப் பேணும் வகையில் அது பற்றிய அறிவை வளர்த்தலும் உணர வைத்தலும்.

ஐ. நா. வின் சூழல் பாதுகாப்புக்கான செயற்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு இவற்றை நடைமுறைப்படுத்துவது அவசியமானதே. எனவே சுற்றுப் புறச் சூழல் சுகாதாரம் பற்றிய அறிவை அனைவருக்கும் வழங்குவதும் அவசியமானதே. சிறியோர் முதல் பெரியோர் வரை எவ்விதப் பாகுபாடுமின்றி அனைவருக்கும் தெளிவாக விளங்க வைத்தல் அவசியம்.

சுகாதார நிறுவனங்களுக்கும் மக்களுக்குமிடையேயான இடைவெளியை மேலும் வைத்திருப்பதோ அதிகரிப்பதோ உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் அனைத்தும் இதில் முக்கிய பங்காற்ற முடியும். பாடசாலைகள் வாயிலாகவும், கல்வித் திட்டங்களூடாகவும் கிராமங்கள், நகரங்கள் தோறும் கருத்தரங்குகளை ஏற்படுத்தி அனைத்து மக்களுக்கும் விளங்க வைக்க முடியும்.

குறிப்பாக மனிதனெனும் மகத்தான இனம் ஒத்துழைக்காவிடின் சுற்றுப்புறச் சூழல் சுகாதாரம் எனும் மான்புறு பணி மாயையாகி விடும் என்பது மட்டும் திண்ணம். இதனை நினைவுகூரும் பொருட்டு வருடந் தோறும் ஜூன் 5-ம் திகதியை உலக சூழற் பாதுகாப்புத் தினமாக ஐ.நா.வால் பிரகடனப்படுத்தி கொண்டாடப் படுவது முற்றிலும் பொருத்தமானதே.

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் பிரச்சனைகள் தீருவதை விரும்பாதவை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், முஸ்லிம் காங்கிரசும் அரசாங்கத்திற்கு தேவையற்ற நெருக்கடிகளை கொடுக்கின்றன. அரசு தமிழர் பிரச்சனை தீர்க்க வேண்டும் என விரும்புவதினால் தான் விடுதலைப்புலிகள் அரசுடன் பேச்சு நடாத்துகின்றனர்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி பொது செயலர் யோகி நேற்று பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றின் போது குறிப்பிட்டார்.

அரசு பல நெருக்கடிகளை உள்ளேயும் வெளியேயும் எதிர்க்கட்சிகளிடமும் சந்தித்து வருகிறது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முஸ்லிம் காங்கிறஸ் என்பன பிரச்சனைகள் தீருவதை விரும்பவில்லை எனவும் யோகி அப்பேட்டியில் குறிப்பிட்டார்.

## மேஜர் முரளி புதிர்ப் போட்டி முதலாம் சுற்று முடிவுகள்

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும், நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனமும் இணைந்து நடாத்திய யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்டத்திலான புதிர்ப் போட்டிகளின் முதலாம் சுற்று சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணக் கோட்டம், பண்டத்தரிப்புக் கோட்டம், மருதனார்மடக் கோட்டம் ஆகியவற்றில் நடைபெற்ற போட்டிகளில் வேம்படி மகளிர் கல்லூரி, பரியோவான் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி, சன்மார்க்க மகா வித்தியாலயம், கதீஜா மகா வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, யூனியன் கல்லூரி, இளவாலை கொன்வென்ற், மல்லாகம் மகா வித்தியாலயம், மகாஜனாக் கல்லூரி, விமன்காமம் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஏழாலை மகா வித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, அச்சுவேலி மகாவித்தியாலயம், அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, உரும்பிராய இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் இரண்டாம் சுற்றுப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இம் மூன்று கோட்டங்களிலும் நடைபெற்ற போட்டிகளில் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அதிக புள்ளிளைப் பெற்றுள்ளது. இப்போட்டிகளில் பண்டத்தரிப்பு இந்துக்கலலூரியைச் சேர்ந்த தி. கேசவன் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இரண்டாம் சுற்றுப்சோட்டி எதிர்வரும் வியாழக்கிழமையன்று காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

### உண்மையை...

அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டதன் பின்னரே உடன்திருத்தவேலைகள்மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

பத்திரிகைகள் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும் போது அதனை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை எமக்கு வளர வேண்டும். உண்மையை எழுதியமைக்காக பத்திரிகையைக் கொழுத்தும் அறிவு ஜீவிகள் தங்கள் அறிவையே சொளுத்திக் கொள்கின்றார்கள்,?

எனவும் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் சந்திரன் குறிப்பிட்டார்.

### ஒரு கிழமைக்குள்...

விலில் உள்ள தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றினை நடத்தினார்.

மாகாண சபையைக் கலைப்பதற்கான மசோதா ஒரு வாரத்துக்குள் கொண்டு வரப்படும் அதன் பின் அனேகமாக மூன்று மாதங்களுக்குள் புதிய தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப் பட்டு அறிவிக்கப்படும் என்று தூதுக்குழுவினருக்கு உறுதியளித்த ஜனாதிபதி தூதுக்குழுவினரின் நிலைப்பாட்டினைக்கூர்மையாகசெவிமடுத்தார்.

''அரசாங்கத்தால் கொண்டு வரப்படவுள்ள குறிப்பிட்ட மசோதாவில் மாகாண சபையை நினைத்த மாத்திரத்தே கலைக்காதபடி அம்சங்கள் ஆணித்தரமாகவும், வலுவுள்ளதாகவும் இருக்கக் கூடியதாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று தூதுக் குழுவினர் ஜனாதிபதியை அழுத்தமாக வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர்.

அரசியலமைப்பின் 13-வது சட்டத்தின்படி மாகாண சபையை முதலமைச்சரின் சிபார்சின்பேரில் கலைக்கலாம் அல்லது ஐந்துவருட ஆட்சியின் பின் கலைக்கலாம் என்ற அம்சம் உள்ளது.

ஆனால் வடக்கு, கிழக்கு மாகாண சபையைப் பொறுத்த விடயத்தில் அரசாங்கம் எதிர்பார்த்திராத ஓர் பிரத்தியேக சூழ்நிலை உருவாயிற்று.

முதலமைச்சரே சொல்லாமல் கொள்ளாமல் நாட்டை விட்டு அகன்று விட்டார். இதனால் அரசாங்கத்துக்கு வடக்கு, கிழக்கு மாகாண சபை விடயத்தில் புதிய சிக்கல் சூழ்நிலை எழுந்தது.

அரசாங்கத்தின் புதிய மசோதாவின் எதிரொலியாக அரசியலமைப்பில் திருத்தம் வராது என்ற நிலைப்பாடும் இத்தருணத்தில் புலிகள் தூதுக் குழுவினருக்கு விபரிக்கப்பட்டது.

ஆறாவது ஷரத்து நீக்கப் பட்டாலன்றி தாம் தேர்தலில் பங்கேற்க மாட்டோம் என்று தூதுக் குழுவினர் ஜனாதிபதியிடம் கண்டிப்பாகக் கூறினார்.

எனவே தேர்தலுக்கு முன்னதாக குறிப்பிட்ட ஷரத்து நீக்கப்பட்டாக வேண்டும் என்று அவர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினர்.

பிரஸ்தாப மசோதா தொடர்பயக அமைச்சரவைக்கும் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்திலும் தாம் எடுத்துரைக்கவுள்ளதாவும் ஜனாதிபதி தெரிவித்துக்கொண்டார்.

ஆறாவது ஷரத்தை நீக்குவதற்கான பிரேரணையை அரசாங்கமே கொண்டுவரும் என்று ஜனாபதி உறுதியளித்தார்.

### ஈரோஸுடன் சந்திப்பு

இது தொடர்பாக ஜனாதிபதியும், நீதியமைச்சர் ஜனாப் ஹமீத்தும் ஈரோஸுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது அரசாங்கத்தின் இத் தீர்மானத்தைத் தெரியப்படுத்தினர்,

புலிகள் தூதுக்குழுவினரின் மேற்படி இருகோரிகைகள் மாகாண சபைகலைப்பு, ஆறாவது ஷரத்து நீக்கம், பற்றி உடன் நடவடிக்கை மேற்கொள்வதென்ற அடிப்படையில்தான் ஜனாதிபதி தமது புதிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார் என்று பேச்சுவார்த்தைகளின் போது புலிகள் தூதுக்குழுவினருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் ஒருவருடகாலமாக நீண்டுகொண்டே போகிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் உருப்படியான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும் எறு தூதுக்குழுவினர் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

### ஸ்ரீலங்கா இராணுவ செயற்பாடு

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் யுத்த முஸ்தீபு நடத்தி வருகின்றனர் என்று ஜனாதிபதியிடம் குழுவினர் கூறினர் இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றனர் என்றும் தெரிவித்தனர்.

இக்குற்றச்சாட்டுகளை ஜனாதிபதி தரப்பில் மறுக்கப்பட்டது.

'விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் மோதத்தயாரில்லை அந்தநோக்கமே அரசாங்கத்துக்கு கிடையாது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒரு வருடத்துக்கு ஒரு தடவை இராணுவத் துருப்புகள் இடமாற்றம் செய்யப் படுவதுண்டு, அந்தஅடிப்படையில்தான் தற்போது துருப்கள் இடமாற்றம் வடக்கு, கிழக்சில் நடைபெறுகிறது. எந்த முகாம்களிலும் துருப்புகள் கூடுதலாகக் குவிக்கப் படவில்லை என்று ஜனாதிபதி சொன்னார்.

மக்கள் மத்தியில் வீண் சந்தேகம் எழக்கூடாது. எனவே அரசாங்கமும், புலிகளும் இணைந்து சமாதான சூழ்நிலையை ஏற்படுத்த பேச்சுவார்த்தைகளைப் பலப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

பிரச்சனையைத் தீர்த்து வைக்க அரசிடம் நம்பிக்கை வைக்கவேண்டும் என்று ஜனாதிபதி தூதுக் குழுவினரைக் கோரினார்.

### ஒத்திவைப்பு

சாவகச்சேரியில் நேற்றைய தினம் நடைபெற்ற கோட்டக் கல்வி அலுவலகத் திறப்பு விழாவின் காரணமாக நேற்று யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற விருந்த பயிலுநர் ஆசிரியர் நியமனம் பற்றிய மீள் பரிசீலனைக் கூட்டம் ஓரிரு தினங்களுக்குப் பிற்போடப்பட்டுள்ளது. (4)

### அருங்காட்சியக கருத்தரங்கு

இயற்கை விஞ்ஞான அருங்காட்சியகம் குறித்தான கருத்தரங்குஇன்று மாலை இரண்டு மணிக்கு யாழ். பல்கலைக் கழக பௌதிகவிரிவுரைமண்டபத்தில் நடைபெறும். கருத்தரங்கை லண்டன் இயற்கை விஞ்ஞான அருங்காட்சியகத்தைச் சேர்ந்த டாக்டர் கிறிஸ் தோபர்லயால் நடாத்துவார்

### மதிய...

களைபெற்றுக் கொள்ளலாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு கோட்டத்தில்50476 மாணவர்களும், களுவாஞ்சிக் குடிக்கோட்டத்தில் 26191 மாணவர்களும் வாளைச்சேனைக் கோட்டத்தில் 23098 மாணவர்கள் என்ற எண்ணிக்கையில்மொத்தம் 99765 மாணவர்களுக்கு மதிய உணவு முத்திரை வழ வழங்கப்படும் (5)

### அமைய...

அமைச்சின் செயலாளர் கலாநிதி பி. ஏ. ரி. குணசிங்கவினால் சகல திணைக்கள தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (05)

### 6வது ஷரத்து...

கருத்திற் கொண்டு பெரும்பான்மை மக்களுக்குத் துரோமிழைக்க அரசு முயற்சிக்கின்றது இச்சட்டத்திருத்தை நீக்கினால் மறு நிமிடமே நாடு துண்டாடப்பட்டால் கூட வியப்பதற்கில்லை இப்படியான நடவடிக்கையை எம்மால் ஏற்க முடியாது.

தேசப்பற்றுள்ள ஒவ்வொரு பிரஜையும் ஒன்றுபட்டு அரசியல் வேறுபாடுகளையும் இன மத, மொழி வேறுபாடுகளையும் மறந்து ஒரே குரலில் அரசின் இம்முயற்சிக்கு எதிர்ப்புக்காட்ட வேண்டும்'' என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

### புலிகள்...

காக வட. கிழக்கின் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் இரு தரப்பினரும் சென்று பரவலாக பொதுப் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது,

இந்தவகையில் நீதியமைச்சர் ஹமீத் சகிதம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர்நாயம் திரு யோகரத்தினம் யோகி ஆகியோர் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்தனர்

இவர்களுடன் மட்டக்களப்பில் நடைபெற்ற சந்திப்பில் வடக்கு,கிழக்கு பிராந்திய இராணுவத்தளபதி ஜெனரல் ஸ்ரான்லிசில்வா, வடக்கு, கிழக்கு பிரதி பொலிஸமா அதிபர் ரி. ஆனந்தராஜன், விமானப்படை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புலிகள் சார்பில் மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தளபதி திரு. கருணா அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் திரு. நியுட்டன் திரு.மகான் ஆகியோரும் பேச்சு வார்த்தைகளில் பங்கேற்றனர்.

இம் மாநாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமை குறித்து இருதரப்பினரும் ஆராய்ந்தனர்.

இங்குள்ள சில இராணுவ முகாம்கள் மூடப்பட வேண்டும் என புலிகள் கேட்டுக் கொண்டபோது அதற்கு இணக்கம் தெரிலிக்கப்பட்டது

### அடுத்த வாரம்

மேற்படி இரு தரப்பினரும் அடுத்த வாரம் திருகோணமலைக்கு ஞஜயம் செய்யவுள்ளனர்.

வாராந்தம் இவர்கள் வட, கிழக்கின் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று நிலைமைகளை ஆராயவுள்ளனர்.

### பரந்தன்...

இன்னும் இரண்டு வாரங்களில் குளோரின் உற்பத்தியும் இரு மாதங்களில் வேறு இரசாயன பொருட்கள் உற்பத்தியும் ஆரம்பிக்கவுள்ளது

### மட்டக்களப்பில்..

தருவிக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### மண்டைதீவு...

தீவுப்பகுதிபிரிவினர்வெளியிட்டுள்ளனர். வேலணை மக்கள் முன்னணி காரியாலயத்தில் மண்டைதீவு, அல்லைப்பிட்டி பகுதி சிற்றூரவை உறுப்பினர்கள் கட்டடத்தில் வைத்து இப்பிரகடனம் வெளியிடப் பட்டது.

கண்ணாப் பற்றைகளும் இயற்கைக் காடுகளும் நிறைந்த அழகு மிகு இப்பிரதேசம் யாழ் நகருக்கு அண்மையில் இருப்பதாலும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக்கவரக்கூடியதாகவும்இருக்கும்.இப்பிரதேசத்தில் வெளிநாட்டு, உள்நாட்டு பறவைகள் பெருமளவில் வந்து வசிப்பதுடன் இனப்பெருக்கங்களையும் செய்து வருகின்றது. இந்த இயற்கைப் பிரதேசம் கடந்த காலங்களில் விறகுத் தேவைக்காக காடழிப்பு நடவடிக்கை பெருமளவில் நடைபெற்றன. (24)


தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

**பொதுக் கூட்டம்**

காலம்: 7-6-90 (வியாழன்) காலை 9.30 மணி

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்.

யாழ். மாவட்டத்தில் உள்ள இதுவரை பதிவு செய்த தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களும் பிரத்தியேக வகுப்புகளுக்குரிய ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

06035


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ல இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 05.06-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்ற து